செய்தி வெளியீடு எண்:683 நாள் : 18.12.2015

# மழை வெள்ளத்தினால் பாதிப்படைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் சீரமைப்பு (18.12.2015 நிலவரம்)

- அண்மையில் பெய்த மழையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்கும் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் 17.12.2015 அன்று, மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் அரசு முதன்மை செயலர், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.
- இரு தவிர, வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களான சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்ட களப் பொறியாளர்கள் மற்றும் தர உறுதி பொறியாளர்களுடன் ( உதவிக் கோட்டப் பொறியாளர்கள் நிலை வரை) சிறப்பு ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.
- மழை வெள்ளத்தால் சேதமடைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் மற்றும் சிறுபாலங்களை உடனடியாக சீரமைக்க தமிழ்நாடு அரசு ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததில் அதிகம் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களுக்கு, [முறையே திருவள்ளூர் (ரூ.26 கோடி), காஞ்சிபுரம் (ரூ.24 கோடி), கடலூர் (ரூ.24 கோடி) மற்றும் சென்னை (ரூ.12.75 கோடி)] ரூ.86.75 கோடியும் வெள்ள சேதம் ஏற்பட்டுள்ள பிற மாவட்டங்களுக்கு ரூ.63.25 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் ஏற்பட்ட 109 சாலை உடைப்புகளில் 106 சாலை உடைப்புகள் சரி செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெறுகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் 2 சாலை உடைப்புகளும் கடலூர் மாவட்டத்தில் 1 சாலை உடைப்பும் வெள்ள நீர் வடிந்தபின் சீர் செய்யப்படும். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 701 சிறுபாலங்கள் சீரமைக்கப்பட்டு தடையில்லா போக்குவரத்து நடைபெறுகிறது. வெள்ள சேதத்தினால் சாலைகளில் 254 இடங்களில் ஏற்பட்ட மண் சரிவு மற்றும் ஆழமாக அறுந்தோடிய சாலை புருவங்கள் போர்க்கால அடிப்படையில் அன்றே சீரமைக்கப்பட்டன.
- அனைத்து சாலை மற்றும் பாலச் சீரமைப்புப் பணிகளை 31.01.2016 க்குள் முடிக்கவும் எஞ்சிய 7 இடங்களில் மாற்று தரைப் பாலங்களை 28.02.2016 க்குள் கட்டி முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9